# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**MCOP 2/2020**

| | | | |
|---|---|---|---|
| Name | : | இசக்கிமுத்து | Pw1 |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 1st day of December 2021.

**முதல் விசாரணை:-**

நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கின்றேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. 27.4.2019 அன்று இலத்தூர் காவல் நிலையத்தார் குற்ற எண்.101/2019 என்ற எண்ணில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் ஒளிப்பட நகல் **ம.சா.ஆ.1**. மேற்படி விபத்தில் இறந்துபோன பாலசுப்பிரமணியன் பிரேத கூராய்வு அறிக்கையின் ஒளிப்பட நகல் **ம.சா.ஆ.2**. TN76F 8296 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் சைக்கிளின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் ஒளிப்பட நகல் **ம.சா.ஆ.3**. TN76AK 2657 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் சைக்கிளின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் ஒளிப்பட நகல் **ம.சா.ஆ.4**. 27.4.2019

தேதியிட்ட மேற்படி விபத்தில் இறந்து போன பாலசுப்பிரமணியனுக்கு நுண்கதிர் எடுப்பதற்கு மருத்துவர் வழங்கிய பரிந்துரை சீட்டின் அசல் **ம.சா.ஆ.5.** 27.4.2019 தேதியிட்ட மேற்படி விபத்தில் இறந்து போன பாலசுப்பிரமணியனுக்கு திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மூளைப்பகுதியில் எடுக்கப்பட்ட நுண்கதிர் ஆய்வக அறிக்கையின் அசல் **ம.சா.ஆ.6.** 27.4.2019 தேதியிட்ட மேற்படி விபத்தில் இறந்து போன பாலசுப்பிரமணியனுக்கு திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அடிவயிற்றில் எடுக்கப்பட்ட நுண்கதிர் அறிக்கையின் அசல் **ம.சா.ஆ.7.** 27.4.2019 தேதியிட்ட மேற்படி விபத்தில் இறந்து போன பாலசுப்பிரமணியனுக்கு திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நெஞ்சில் எடுக்கப்பட்ட நுண்கதிர் அறிக்கையின் அசல் **ம.சா.ஆ.8.** 27.4.2019 தேதியிட்ட மேற்படி விபத்தில் இறந்து போன பாலசுப்பிரமணியனுக்கு எடுக்கப்பட்ட நுண்கதிருக்கான கட்டண ரசீதுகள் -3 அசல் (ரூ.1500/-) **ம.சா.ஆ.9.** 28.4.2019 அன்று மேற்படி விபத்தில் இறந்து போன பாலசுப்பிரமணியன் மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் செலுத்திய பதிவு கட்டண ரசீது - 1 அசல் (ரூ.125/-) **ம.சா.ஆ.10.** மேற்படி விபத்தில் இறந்து போன பாலசுப்பிரமணியன் அப்பல்லோ மருத்துவமனையில் 28.4.2019 முதல் 29.4.2019 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கு நரம்பியல் அறுவை சிகிச்சை துறையில் வழங்கிய விடுவிப்பு சான்றின் அசல் **ம.சா.ஆ.11.** 28.4.2019 தேதியிட்ட மேற்படி விபத்தில் இறந்து போன பாலசுப்பிரமணியன் மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதற்கு மருத்துவமனை வழங்கிய MLC பதிவேடு ஒளிநகல் **ம.சா.ஆ.12.** 28.4.2019 தேதியிட்ட மேற்படி விபத்தில் இறந்து போன பாலசுப்பிரமணியனுக்கு மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் மூளையில் எடுக்கப்பட்ட நுண்கதிர் ஆய்வக அறிக்கையின் அசல் **ம.சா.ஆ.13.** 29.4.2019 தேதியிட்ட மேற்படி விபத்தில் இறந்து போன பாலசுப்பிரமணியன் மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கு மருத்துவமனைக்கு வழங்கிய கட்டண ரசீது அசல் (ரூ.63,694/-) **ம.சா.ஆ.14.**

28.4.2019, 29.4.2019 ஆகிய தேதிகளில் மேற்படி விபத்தில் இறந்துபோன பாலசுப்பிரமணியனுக்கு மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் வழங்கிய ஆய்வக அறிக்கையின் அசல் **ம.சா.ஆ.15.** மேற்படி விபத்தில் இறந்துபோன பாலசுப்பிரமணியனுக்கு எடுக்கப்பட்ட ஊடுகதிர் -6 அசல் **ம.சா.ஆ.16.** மேற்படி விபத்தில் இறந்துபோன பாலசுப்பிரமணியனின் வாரிசுகளைக் குறிக்கும் வாரிசு சான்றிதழ் ஒளிநகல் **ம.சா.ஆ.17.** மனுப்படி உத்தரவிட வேண்டும். **(ம.சா.ஆ.9,14 ஆகிய இரண்டு ஆவணங்கள் 3ம் எதிர்மனுதாரரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டு இருக்கிறது)**

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்தில் இறந்தவர் எனது அப்பா ஆவார். அவருடைய வயது 65வயதிற்கு மேலே என்றால் 64 ஆகும். அவருடைய பிறந்த தேதியை காண்பிக்கும் ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய தகப்பனாரின் பிரேத பரிசோதனை அறிக்கையில் தகப்பனாரின் வயது 65 என்று காண்பிக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். எனது தகப்பனார் ஆட்டு இறைச்சி வியாபாரம் செய்தார் என்பதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆட்டு இறைச்சி வியாபாரம் செய்வதற்கு உள்ளாட்சி துறையிலோ சுகாதார துறையிலோ லைசென்ஸ் வாங்கவேண்டும் என்றால் லைசென்ஸ் இருக்கிறது ஆனால் தாக்கல் செய்யவில்லை. 2,3,4 மனுதாரர்கள் என்னுடைய உடன்பிறந்த சகோதரிகள். அவர்களுக்கு திருமணம் ஆகி அவர்கள் தனியே வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் ரெயில்வேயில் பணிபுரிந்து மாதம் ரூ.35000 சம்பளம் பெறுகிறேன். என்னுடைய அம்மாவை தவிர 2,3,4,5 மனுதாரர்கள் எனது தகப்பனாரின் வருமானத்தை நம்பி இருக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் ஆட்டு இறைச்சி வியாபாரம் செய்து வந்தார் என்பதற்கான வரவு செலவு கணக்கு ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய அப்பா ஓட்டிச்சென்ற வாகனம் எனது அப்பாவின் வண்டி ஆகும். இந்த வாகனம் 3ம்

எதிர்மனுதாரர் காப்பீடு கழகத்தில் காப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த விபத்து சம்பந்தமாக 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் கோரிக்கையோ தகவலோ கொடுத்திருக்கிறோமா என்றால் கொடுத்திருக்கிறோம். அது சம்பந்தமான ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது தகப்பனாருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. விபத்து இடத்தில் காணாமல் போய் விட்டது. அந்த ஓட்டுநர் உரிமத்தின் எண்ணை வைத்து சம்பந்தப்பட்ட போக்குவரத்து அலுவலகத்தில் ஆவணம் பெறலாம் என்று சொன்னால் ஓட்டுநர் உரிமத்தின் எண் கிடைக்கவில்லை. விபத்து காலத்தில் எனது தகப்பனாருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரியல்ல. இந்த 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தை பொறுத்து 1 முதல் 5 மனுதாரர்களும் விபத்தில் இறந்தவரும் 3ம் தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல. நாங்களும் இறந்த நபரும் வாகனத்தின் உரிமையாளர்கள் என்ற நிலையில் 3ம் தரப்பினர்கள் இல்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்பந்தமாக எனது தாயார் தான் புகார் அளித்தார். அந்த புகாரில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்ற விபரம் எனக்கு தெரியும். புகாரில் எனது தகப்பனார் ஆட்டு இறைச்சிக்காக ரெட்டியார்பட்டி சந்தையில் ஆடுகள் வாங்கி வந்து கொண்டிருந்தபோது இந்த விபத்து நடந்தது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு தலையில் ஏற்பட்ட காயத்தினால் தான் இறப்பு ஏற்பட்டதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது என்றால் சரிதான்.நான் தாக்கல் செய்திருக்கும் மருத்துவ ஆவணங்கள் அனைத்தும் தலை மற்றும் மூளைக்கு சிகிச்சை அளித்ததற்கான ஆவணங்கள் என்றால் சரிதான். அப்போலோவிலிருந்து வாசலுக்கு வந்தபோது எனது அப்பா இறந்து விட்டார். விபத்து சமயத்தில் எனது அப்பா மெதுவாக வாகனத்தை ஓட்டிச்சென்றதாகத்தான் நான் கூறியிருக்கிறேன். விபத்திற்கு எதிரே வந்த டிஎன்76 எப் 8296 என்ற எண் கொண்ட டிவிஎஸ் பெப்டி வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநர் தான் காரணம் என்று சொன்னால் எனது அப்பாவும் ஒரு காரணம் தான். 1ம் எதிர்மனுதாரர் மீது தான் மு.த.அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ஆனது

அந்த வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு இல்லை என்று சொன்னால் சரிதான். எதிரே வந்த மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்த நபருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் மீது தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு 1வது எதிர்மனுதாரர் ஓட்டி வந்த மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவர் தான் காரணம் என்பதால் 1,2 எதிர்மனுதாரர்கள் எனக்கு சட்டப்படி நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது அப்பாவிற்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாததாலும் வாகனத்தின் உரிமையாளர் என்பதாலும் பாலிசி விதிமுறைகளை மீறியிருப்பதால் 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் எங்களுக்கு எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் மெடிக்கல் பில், மருத்துவமனை பில் ஆகியவை அதிக நஷ்ட ஈடு பெறவேண்டும் என்பதற்காக எங்களால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்தை பற்றி கேள்விபட்டேன். பல்வேறு தலைப்புகளில் நான் கோரியிருக்கும் நஷ்ட ஈடு அதிகம் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரைப்பொறுத்து இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் எங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றால் 1,2 எதிர்மனுதாரர்கள் தான் கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல.